
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :30 April 2026
கோட்டை:8 வாயில்:30 ஏப்ரல் 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண்

# Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

---

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com

---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**சங்க இலக்கியத்தில் ஒப்பனைக் கருவிகள்**

*Cosmetic tools in Sangam literature*

**ஆய்வாளர்**

**பெ.ஜான்சிராணி,**

*Reg No: BDU2310632780327, Date: 07.07.2025*

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,

தமிழாய்வுத்துறை,

அரசு கலைக்கல்லூரி (நிலை-1),

அரியலூர் - 621 713, தமிழ்நாடு,

(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

**நெறியாளர்**

**முனைவர் த.மரகதம்**

இணைப்பேராசிரியர்,

தமிழாய்வுத்துறை,

அரசு கலைக்கல்லூரி (நிலை-1)

அரியலூர் - 621 713, தமிழ்நாடு,

(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

***Research Scholar***

*P.Jansirani*

*Reg No: BDU2310632780327*

*Full Time Research Scholar,*

*Department of Tamil,*

*Govt Arts College (Grade-1),*

*Ariyalur - 621713, Tamilnadu.*

*(Affiliated with Bharathidasan University)*

***Guide***

*Dr.T.Maragatham,*

*Associate Professor,*

*Department of Tamil,*

*Govt Arts College (Grade-1),*

*Ariyalur - 621713, Tamilnadu.*

*(Affiliated with Bharathidasan University)*

**ஆய்வுச்சுருக்கம்**

உலக மொழிகளுள் தொன்மையும், தனித்தன்மையும் கொண்ட உயர்தனிச் செம்மொழியாகத் திகழ்வது தமிழ் மொழியாகும். தமிழ்மொழியில் இடம்பெற்றுள்ள சங்க இலக்கியங்கள் அகம், புறம் என இரு வகைகளாகப் பாகுப்படுத்தப்பட்டுள்ளன. அகம் காதல் கருவூலமாகும், புறம் வீரத்தின் வித்தாகவும் போற்றப்படுகின்றது. பண்டையக் கால மக்களின் காதல், வீரம், கல்வி, ஈகை, விருந்தோம்பல், கலை ஆகியவற்றை சங்க இலக்கியங்கள் பறைச்சாற்றுகின்றன. சங்க கால மக்களின் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் காலக்கண்ணாடியாக சங்க இலக்கியங்கள் அமைகின்றன. இயல், இசை, நாடகம், ஆடல், பாடல், சிற்பம், ஓவியம் என பல கலைகளில் வல்லவர்களாகத் திகழ்ந்த சங்கத் தமிழர்கள்

ஒப்பனைக் கலையிலும் சிறந்து விளங்கினர். அக்கலைத் துறையில் முறையே அறிவு நுட்பமும் பெற்றிருந்தனர். சங்க கால மக்களின் அழகியல் உணர்வையும், கலைத்திறனையும் வெளிக்காட்டும் குறியீடாக ஒப்பனைக் கலை அமைகின்றது. அழகில் குறைந்தவர்களை அழகுடையவர்களாக மாற்றவும் இயல்பான அழகுடையவர்களை மேலும் அழகுடையவர்களாக மிகுவித்துக் காட்டவும் ஒப்பனைப் பயன்படுகின்றது. ஆதியில் இயற்கைப் பொருள்களைக் கொண்டு ஒப்பனைச் செய்துக்கொண்ட மக்கள் தன் அறிவு நுட்பத்தாலும் அறிவியல் நுட்பத்தாலும் பல்வேறு கருவிகளைக் கண்டுபிடித்து அக்கருவிகளின் மூலம் அவர்களின் ஒப்பனைக்கலையைச் சிறப்பித்துக் கொண்டனர். சங்கத் தமிழர் பயன்படுத்திய கண்ணாடி, கத்தரிக்கோல், கத்தி, சீப்பு, விசிறி, செப்பு, எழுதுகோல், பேழை, நீரெக்கி போன்ற ஒப்பனைக் கருவிகளையும் அவற்றின் அமைப்பையும், பயனையும் சங்க இலக்கியங்களின் துணைக்கொண்டு இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**திறவுச்சொற்கள்:** கண்ணாடி, , மயிர்குறை கருவி , செப்பு, விசிறி, பேழை

### *Abstract*

*Tamil is the world's oldest and most distinctive classical language. There are two types of Sangam literature in Tamil: external and internal. The external is the seed of bravery, and the internal is the storehouse of love. Sangam literature extols the virtues of the ancient people—love, bravery, education, hospitality, generosity, and art. Sangam literature depicts the way of life of the Sangam people and acts as a mirror of time. In addition to being talented in a variety of artistic mediums, including literature, music, dance, drama, song, sculpture, and painting, Sangam Tamils were also skilled in makeup. In that area of art, they were also competent and knowledgeable. The Sangam period's artistic talent and sense of aesthetics are demonstrated through the art of makeup. Through the use of makeup, people who are less attractive can become more attractive. In the past, people applied makeup using natural materials. Using scientific methods and their knowledge, they created a variety of tools and improved their makeup art. Using Sangam literature, this article explores the structure and functions of various makeup tools used by the Sangam Tamils, including mirrors, scissors, knives, combs, fans, copper, pencils, boxes, and water jugs.*

***Keywords:*** *mirror, scissors, flower box, fan, box.*

**முன்னுரை**

உலக நாகரிகத்தில் தமிழர்தம் நாகரிகம் தலைச்சிறந்த நாகரிகமாக அமைகின்றது. பல்வேறு துறைகளில் வளர்ச்சிப் பெற்றிருந்த தமிழர்கள் கலைத்துறையிலும் அதிக வளர்ச்சிப் பெற்றிருந்தனர்.

பழந்தமிழர்களின் நாகரிகத்தையும், கலை வளர்ச்சியையும் சங்க இலக்கியங்கள் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன. பழந்தமிழர்கள் தங்களை ஒப்பனைச் செய்து கொள்வதிலும், அழகுப்படுத்திக் கொள்வதிலும் அலாதி விருப்பம் உடையவர்களாக இருந்தனர்.

தமிழ் மக்கள் பல்வேறு கலைகளை வளர்த்து அவர்தம் வாழ்வியலைச் செம்மைப்படுத்தினர். அவற்றுள் ஒப்பனைக் கலையும் ஒன்று.

இயற்கையோடு இணைந்து வாழ்ந்த தமிழர்கள் இயற்கைப் பொருள்களை கொண்டு அவர்களை அழகுப் படுத்திக்கொண்டனர். பிறகு நாகரிக வளர்ச்சியின் காரணமாகவும் பல கண்டுபிடிப்புகளின் மூலமும் ஒப்பனைச் செய்வதற்குரிய கருவிகளைக் கண்டுபிடித்தனர். அதன் வழியாக தங்களுடைய அழகியல் வளர்ச்சியை மேம்படுத்திக் கொண்டார்கள்.

சங்க இலக்கியங்களில் காணலாகும் ஒப்பனைக் கருவிகளையும் அதன் அமைப்புகளையும் மக்கள் அக்கருவிகளை கையாண்ட முறை குறித்தும் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

**கண்ணாடி**

சங்க இலக்கியங்களில் கண்ணாடி அழகுப்படுத்தும் கருவியாகவும். சங்ககால மக்களின் வாழ்வியல் உண்மைகளை பிரதிப்பலிக்கும் மெய்யியல் குறியீடாகவும் அமைந்துள்ளது.

சங்க கால மக்கள் ஒப்பனைக்குப் பயன்படுத்திய சிறப்பான கருவிகளுள் கண்ணாடியும் ஒன்று. அதற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையாக காணப்படுகின்றன.

கண்ணாடியைக் குறிப்பதற்கு சங்க இலக்கியங்களில் **ஆடி, ஒளிவட்டம், படிமக்கலம், மண்டிலம், பாண்டில், நிழல்காண், வயங்குமணி, வயங்கல், கண்ணாடி, கண்ணடி, பளிங்கு தட்டொளி** போன்ற சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

கண்ணாடி முன்நின்று நாம் எதை செய்கிறமோ அதையே திரும்ப செய்துக் காட்டும் தன்மையுடையது கண்ணாடி என்பதை,

**"கையும் காலும் தூக்கத் தூக்கும்**
**ஆடிப் பாவை போல"** (குறுந் 8: 4-5)

என்று குறுந்தொகைப் பாடலடி குறிப்பிடுகின்றது.

மேலும்

**"எள்ளற இயற்றிய நிழல்காண் மண்டிடல்**

**துள்ளூ தாவியிற் டையப்பய நுணுகி"** ***(அகம் 71: 13-14)***

என்னும் அகநானூற்றுப் பாடல் முகம் பார்க்கும் கண்ணாடியில் புகைப் படிவதைப் போல் தோழியின் மன உறுதி குறைவதாக கூறுகிறது. மேலும் தன்னை அடுத்து இருக்கும் பொருள்களின் உருவத்தைக் காட்டும் தன்மை கண்ணாடிக்கு உண்டு என்னும் செய்தியை,

***"அடுத்து காட்டும் பளிங்கு போல் நெஞ்சம்"*** ***(குறள்எண்: 706)***

என்னும் திருக்குறள் வழியாக வள்ளுவர் விளக்குகின்றார். சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலையில் கண்ணாடி ஆடி என்ற பெயரில் குறிப்பிடப்படுகின்றது.

**கண்ணாடியின் மாசு நீக்குதல்**

கண்ணாடியின் மீது படிந்துள்ள அழுக்குகளை நீக்கி தூய்மைப்படுத்த சங்க கால மக்கள் நறுமண நெய் மற்றும் வெண்மையான கல்துகள்களை இட்டு கண்ணாடியை துளக்கி அதில் உள்ள மாசுக்களை அகற்றினர் என்ற செய்தியை

**"வாச நறுநெய் ஆடி வான்துகள்**

**மாசு அறக் கண்ணாடி வயக்கி வண்ணமும்**

**தேசும் ஒளியும் திகழ நோக்கி"** ***(பரி 12: 11-13)***

என்னும் பரிபாடலடிகள் ஒப்பனைச் செய்வதற்கு முன் ஒப்பனைக்கு தேவைப்படும் பொருள்களை தூய்மைப் படுத்திய பிறகே அதனை மக்கள் பயன்படுத்தினர் என்ற கருத்தைத் தெளிவுப்படுத்துகின்றது.

**கத்தரிக்கோல்**

எஃகினால் உருவாக்கப்பெற்ற கத்தரிக்கோலை மக்கள் பயன்படுத்தினர். சங்க காலத்தில் கத்தரிக்கோல் மயிர்குறை கருவி என்ற பெயரில் பயன்படுத்தப்பட்டுள்ளது. நீண்டக் கூந்தலை

ஒழுங்குபடுத்தி அளவாகச் சீவிக் குறைப்பதற்கு **மயிற்குறை கருவி** பயன்படுத்தப்பட்டுள்ளது. என்பதை

***"மயிர்குறை கருவி மாண் கடையன்ன" (பொருநர், 29)***

என்னும் பொருநராற்றுப்படை பாடலடி விளக்குகின்றது. மேலும் அழகாக ஒழுங்குபடுத்தி ஐந்துக் கால்களாகப் பின்னப்பட்ட கூந்தலை வகுத்து எஃகினால் ஆன கத்தரிக்கோல் கொண்டு வெட்டி ஒப்பனைச் செய்தனர். இதனை,

***"எஃகிடை தொட்ட கார்க்கவின் பெற்ற***

***ஐம்பால் போல" (கலி 32:1)***

என்னும் கலித்தொகைப் பாடலடி வழியாக அறியமுடிகிறது.

மேலும்

***"வாளிடைப் படுத்த வயங்கீர் ஓதி" (கலி 36:23)***

என்னும் கலித்தொகைப் பாடலடி வாள் கொண்டு கூந்தலை சீர்படுத்திய செய்தியை விவரிக்கின்றது. மேலும் மயிர்குறை கருவிக்கொண்டு கொய்யப்பட்ட கூந்தலை

***"பால்பிரியா ஐங்கூந்தற் பன்மயிர் கொய்சுவல்***

***மேல்விரித் தியாத்த சிகழிகை" (கலி 96: 8-9)***

என்னும் கலித்தொகைப் பாடலடி மூலம் அறியமுடிகின்றது. மேலும் குதிரையின் பிடரி மயிரை ஒழுங்குபடுத்துவதற்காக உருவாக்கப்பெற்ற மயிர்குறை கருவியை

***"எஃகுபடை அறுத்த கொய்சுவல் புரவி" (பதிற் 62:2)***

என்னும் பதிற்றுப்பத்து பாடலடி குறிப்பிடுகின்றது. மேற்கண்ட சான்றுகளை நோக்கும் போது கூந்தலை ஒழுங்குப்படுத்தி அழகுற ஒப்பனைச் செய்வதற்கு அக்கால மக்கள் கத்தரிகை பயன்படுத்தியச் செய்தியை தெளிவாக அறியமுடிகின்றது.

***சீப்பு***

கூந்தலை வகுத்தும் வாரியும் ஒழுங்குப்படுத்தி ஒப்பனைச் செய்வதற்கு கழல்மணிக் கொடியின் கனியைச் சீப்பாக சங்ககால மக்கள் பயன்படுத்தினர் என்பதை,

**"கழற்கணி வகுத்த துணைச்சில் லோதி**

**குறுந்தொடி மகளிர் தோள்விடல்" (புறம் 97: 23-24)**

என்ற புறநானூற்றுப் பாடல் வெளிப்படுத்துகின்றது. மேலும் **"சோழர் காலத்தில் யானையின் மருப்பினால் சீப்புகள் செய்யப்பட்டன எனவும் தலைவாருவதற்கு முன்பு அதற்கு நறுமண மூட்டுவார்கள் என்றும்" (தமிழர் பண்பாடு மற்றும் பாரம்பரியம் ப.179)** என்ற நூலில் மோகன்ராஜ் கூறியுள்ளார். மேலும் **"சீப்பு யானைத் தந்தத்தால் செய்யப்பட்டு அதில் பொன்னைப் பதித்து நறுமணம் ஊட்டி அழகுப்படுத்தப்பட்டது எனவும் அச்சீப்பு மங்கல மணிச்சீப்பு என்ற பெயரில் வழங்கப்பட்டது என்றும்" (சீவகம் 12:2436)** சீவகசிந்தாமணி குறிப்பிடுகின்றது.

**செப்பு**

இக்காலத்தில் பயன்படுத்தும் குளிர்நாதனப் பெட்டியைப்போல் சங்க காலத்தில் ஒப்பனைக்குரிய மலர்களையும், மாலைகளையும் வாடாமல் பாதுகாப்பதற்காக இட்டு வைக்கும் சிறிய பெட்டியே செப்பு எனப்பட்டது. மாட்சிமையுடைய செப்பினுள் இட்டு வைத்த மலர்களை ஒருவரும் சூடாதது போலத் தன்மேனி வாட்டங்கொண்டு தான் தனித்திருக்கும் நிலையினைச் செப்பினுள் இருக்கும் மலர்களுடன் ஒப்புமைப்படுத்துகின்றாள் தலைவி இதனை,

**"மடைமாண் செப்பில் தமிய வைகிய**

**பொய்யாப் பூவின் மெய் சாயினளே" குறுந் 9: 2-3**

என்ற குறுந்தொகைப் பாடலடிகள் புலப்படுத்துகின்றது. பூச்செப்பில் வைத்து மூடிய மலரை நீண்டநாள் பயன்படுத்தாமல் இருந்தால் அம்மலர் வாடி அழியும் அதுபோல தன்நிலைமை உள்ளது என்பதை,

**"முகைவாய்த்த முலைபாயக் குழைந்த நின் தாரெள்ள**

**வகைவரிச் செப்பினுள் வைகிய கோதையேம்" கலி 68:14-15**

என்ற கலித்தொகைப் பாடலடி வழியாக உணரமுடிகின்றது. இதன் மூலம் சங்க கால மக்கள் மலர்களை வைத்துப் பாதுகாக்க செப்பு என்னும் பெட்டியை பயன்படுத்தினர் என்பதை தெளிவாக அறியமுடிகின்றது.

**விசிறி**

சங்க இலக்கியங்களில் விசிறி, **ஆலவட்டம்** என்றும் **செங்கேழ் வட்டம்** என்று அழைக்கப்பட்டது. ஒப்பனைச் செய்யும்போது ஒப்பனைக் கலைந்துவிடாமல் இருப்பதற்கு விசிறி வழியாக காற்று வீசப்பட்டது.

சங்க காலத்தில் மடித்து உறையிலிடவும் விரித்துப் பயன்படுத்தவும் ஏற்ற வகையில் தொழில் நுட்பத்தோடு கூடிய விசிறியை கைத்தொழில் வல்லவனாக இருக்கக்கூடிய கம்மியன் உருவாக்கினான்.

இதனை,

**"கைவல் கம்மியன் கவின் பெறப் புனைந்த**

**செங்கேழ் வட்டம் சுருக்கி கொடுந்தறி"** **நெடுநெல் 56-57**

என்னும் நெடுநல்வாடை பாடலடிகள் குறிப்பிடுகின்றது.

**எழுதுகோல்**

மகளிர் தம் கண்களில் மைத்தீட்டிக் கொள்ள பயன்படுத்திய குச்சி எழுதுகோல் என்று வழங்கப்பட்டது. இக்காலத்தில் பெண்கள் கண்களில் மைத்தீட்டிக் கொள்ள ஒருவகைப் பென்சிலைப் பயன்படுத்துகின்றனர். இவ்வழக்கம் சங்க காலத்திலே இருந்துள்ளது. இதனை,

**"ஐதேய்ந்து அகன்ற அல்குல் மைகூர்ந்து**

**மலர்பினணத் தன்ன மாயிதழ் மழைக்கண்"** **(நற்றி 25:8-9)**

என்னும் நற்றினைப் பாடலடிகள் விளக்குகின்றது.

மேலும் சங்க காலத்தில் பெண்கள் கண்களுக்கு மைத்தீட்டிக் கொள்வதில் மிகுந்த ஆர்வம் உடையவர்களாக இருந்தனர் என்பதை,

**"மையெழில் மலர் உண் கண்"** **(கலி 27:17)**

**"மையெழில் லுண்கண் மடந்தை"** **(அகம் 256:10)**

**"மைத்தடங் கண் மணமகளிர்"** **(சிலம்பு 7:2)**

**"ஒளிகிளர் உண்கண்"** **(பரி 16:48)**

என்னும் இலக்கியச் சான்றுகள் வழியாக அறியமுடிகின்றது.

**பேழை**

சங்க கால மக்கள் ஆடைகளையும், அணிகலன்களையும் பாதுகாத்து வைப்பதற்கு பயன்படுத்திய பெட்டியே பேழை என்று அழைக்கப்பட்டது. பண்டையக் காலத்தில் பொன்னாலும் மணியாலும் செய்யப்பட்ட அணிகலன்களை பராமரித்து வைப்பதற்கு மூடித்திறக்கும் வகையில் தொழில்நுட்பத்துடன் கூடிய பேழைப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்செய்தியை,

**"பொன்பெய் பேழை முய்திறந் தன்ன" (குறுந் 233:3)**

என்னும் குறுந்தொகைப் பாடலடி விளக்குகின்றது. மேலும் ஆடையையும் அணிகலன்களையும் பாதுகாத்து வைக்க கலிங்கப்பெட்டியும் பேழையும் பயன்படுத்தப்பட்டுள்ள செய்தியை சீவகசிந்தாமணி,

**"வழங்கு வங்கக் கலிங்கக் கடகமும்**

**அழுங்கு மாந்தர்க்கு அணிகலப் பேழையும்" (சீவகம் 4:863)**

என்று குறிப்பிடுகிறன்றது.

**நீரெக்கி**

சங்க கால மக்கள் வாசனையுடைய மணங்கமழும் நீரைச் சேமித்து வைப்பதற்கு பயன்படுத்திய கருவி நீரெக்கி ஆகும். இது பரிபாடலில் **வட்டு, துருத்தி, சுருங்கை** என்று பிற பெயர்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை,

**"பூ எழில் வண்ணநீர் பூரித்த வட்டு" (பரி 12:68)**

என்னும் பரிபாடலடி வழியாக அறிய முடிகின்றது. மேலும் பனிநீர், சந்தனம் போன்ற மணப்பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பெற்ற நறுமணமுடைய நீரைச் சேமித்து வைப்பதற்கு துருத்தி என்னும் நீரெக்கி கருவி சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்டது என்பதை,

**"நெய்த்தோர் நிற அரக்கின் நீரெக்கி யாவையும்**

**முத்து நீர் சாந்து அடைத்த மூஉய்த் தத்திப்**

**புகவரும் பொங்குளைப் புள்ளியல் மாவும்" (பரி 10:12-13)**

என்னும் பரிபாடலடிகள் குறிப்பிடுகின்றது. இந்த நீரெக்கி கருவிகளை கொண்டு நீராட வைகையாற்றுக்கு செல்லும் பெண்கள் ஒருவரையொருவர் தங்கள் மீது மணநீரை அடித்து விளையாடிக் கொள்வார்கள். இந்த மணநீரைக் கொண்டு ஒப்பனையும் செய்துக் கொள்வார்கள்.

இதன் மூலம் சங்க காலத்தில் நறுமணப் பொருள்களை அடைத்து வைப்பதற்கு நீரெக்கி என்னும் கருவியைப் பயன்படுத்தியமையை அறியமுடிகிறது.

**முடிவுரை**

பழந்தமிழர் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கினர். ஒப்பனைச் செய்து அழகுப்படுத்திக் கொள்வதிலும் அதிக ஆர்வம் உடையவர்களாக இருந்தனர். ஆதியில் இயற்கைப் பொருள்களைக் கொண்டு அழகுச் செய்துக் கொண்ட தமிழர்கள் அறிவு நுட்பத்தால் பல்வேறு கருவிகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

அக்கருவிகளின் துணைக்கொண்டு தம்முடைய அழகியல் கலையை மேம்படுத்திக் கொண்டார்கள். சங்க கால மக்கள் கண்ணாடி, கத்தரிக்கோல், சீப்பு, விசிறி, செப்பு, எழுதுகோல், பேழை, நீரெக்கி போன்ற ஒப்பனைக் கருவிகளைப் பயன்படுத்தினர். சங்க இலக்கியத்தில் கண்ணாடி பயன்படுத்தியதற்கான சான்றுகள் ஏராளமாக உள்ளது. சங்கப் புலவர்கள் இடத்திற்கு ஏற்றாற்போல் கண்ணாடியைப் பல்வேறு பெயர்களால் கையாண்டுள்ளனர்.

சங்க காலத்தில் கண்ணாடி, ஆடி, ஒளிவட்டம் பளிங்கு, படிமக்கலம், மண்டிலம், பாண்டில், நிழல்காண், வயங்குமணி, வயங்கல், கண்ணடி போன்ற பல்வேறு பெயர்களில் இலக்கியங்களில் பதிவுச்செய்யப்பட்டுள்ளது. பழந்தமிழர்கள் அடர்த்தியான நீண்டக் கூந்தலை அளவாக சீவிக் குறைப்பதற்கு கத்தரிக்கோலைப் பயன்படுத்தினர். இது சங்க இலக்கியத்தில் மயிர் குறை கருவி என்னும் பெயரில் வழங்கப்பட்டுள்ளது.

கூந்தலை வகிடு எடுத்து வாரி ஒழுங்குபடுத்த கழல்மணிக் கொடியின் கனியைச் சீப்பாகப் பயன்படுத்தினர். பூக்களைப் பாதுகாத்து வைப்பதற்கு பூச்செப்பு பயன்படுத்தினர். ஒப்பனைச் செய்யும் போது வெப்பத்தின் காரணமாக உடலில் இருந்து வெளிப்படும் வியர்ப்பு நீரால் ஒப்பனைக் கலைந்து விடாமல் இருப்பதற்கு விசிறி வழியாக காற்று வீசப்பட்டது.

சங்க இலக்கியங்களில் விசிறி ஆலவட்டம், செங்கேழ் வட்டம் என்ற பெயரில் பயன்பாட்டில் இருந்தது. கண்களுக்கு மைத்தீட்ட சங்ககால பெண்கள் கோல் பயன்படுத்தினர். ஆடை அணிகலன்களைப் பாதுகாத்து வைப்பதற்கு பேழை என்னும் பெட்டியை பயன்படுத்தினர். நறுமணமுள்ள நீரை அடைத்து வைப்பதற்கு நீரெக்கி வட்டு, துருக்கி, சுருங்கை என்னும் கருவியைப் பயன்படுத்தினர்.

சங்க கால மக்கள் பயன்படுத்திய ஒப்பனைக் கருவிகளுள் கண்ணாடி மிகுதியாக பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே அறிவு வளர்ச்சியாலும், அறிவியல் வளர்ச்சியாலும் பல்வேறு கருவிகளை கண்டுபிடித்து தங்களுடைய கலை வளர்ச்சியை மேம்படுத்திக் கொண்ட தமிழர்களின் அறிவு நுட்பம் போற்றுதலுக்குறியதாகும்.

**துணைநூற்பட்டியல்**


1. அடியார்க்குநல்லார் (உ.ஆ), சிலப்பதிகாரம், மூலமும் உரையும், உ.வே.சாமிநாதையர், நூல்நிலையம், சென்னை-90, பதினான்காம் பதிப்பு, 2021.
2. சோமசுந்தரனார் பொ.வே.(உ.ஆ), குறுந்தொகை, மூலமும் உரையும், கழகவெளியீடு, சென்னை-18, மறுபதிப்பு-2007.
3. சோமசுந்தரனார் பொ.வே.(உ.ஆ), பரிபாடல், மூலமும் உரையும், கழகவெளியீடு, சென்னை-18, மறுபதிப்பு-2008.
4. துரைசாமிப்பிள்ளை, சு.ஔவை (உ.ஆ), பதிற்றுப்பத்து, மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை-18, மறுபதிப்பு-2023.
5. துரைசாமிப்பிள்ளை, சு.ஔவை (உ.ஆ), புறநானூறு தொகுதி-1,2, மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை-18, முதல் பதிப்பு-1951.
6. நச்சினார்க்கினியர் (உ.ஆ), பதிற்றுப்பத்து, மூலமும் உரையும், உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை-90. ஒன்பதாம் பதிப்பு-2019.
7. நச்சனார்க்கினியர் (உ.ஆ), கலித்தொகை, மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை-18, முதற்பதிப்பு-1943.
8. நச்சினார்க்கினியர் (உ.ஆ), சீவகசிந்தாமணி, மூலமும் உரையும், தமிழ்ப்பல்கலைக்கழக, மறுதோன்றி அச்சகம், பதிப்பாண்டு-1986.
9. நாராயணசாமி ஐயர், பின்னத்தூர் (உ.ஆ) நற்றினை மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை-18 முதல் பதிப்பு-1952.
10. பரிமேலழகர் (உ.ஆ), திருக்குறள், மூலமும் உரையும் கழகவெளியீடு சென்னை-18, மறுபதிப்பு-2008.
11. வேங்கடசாமி நாட்டார் ந.மு.(உ.ஆ), அகநானூறு, மூலமும் உரையும், கழக வெளியீடு சென்னை-18, முதல்பதிப்பு-1944.


*References;*


1. *Adiyarkunallar (U.A.), Silappathikaram, Source and Text, U.V.Saminathayar, Library, Chennai-90, Fourteenth Edition, 2021.*

2. *Somasundaranar P.V.(U.A.), Kurunthokai, Source and Text, Kazhagam Publication, Chennai-18, Reprint-2007.*
3. *Somasundaranar P.V.(U.A.), Paribadal, Source and Text, Kazhagam Publication, Chennai-18, Reprint-2008.*
4. *Duraisamy Pillai, Su.Auvai (U.A.), Pathitruppathu, Source and Text, Kazhagam Publication, Chennai-18, Reprint-2023.*
5. *Duraisamy Pillai, Su.Auvai (U.A.), Purananuru Volume-1,2, Source and Text, Association Publication, Chennai-18, First Edition-1951.*
6. *Nachinarkiniyar (U.A.), Pathitruppattu, Source and Text, U.V.Sami Nathayar Library, Chennai-90. Ninth Edition-2019.*
7. *Nachinarkiniyar (U.A.), Kalithoki, Source and Text, Association Publication, Chennai-18, First Edition-1943.*
8. *Nachinarkiniyar (U.A.), Seevakasinthamani, Source and Text, Tamil University, Maruthonri Press, Year of Publication-1986.*
9. *Narayanasamy Iyer, Pinnathur (U.A.) Nattrini Moolamum Utsukum, Kazhagam Publication, Chennai-18 First Edition-1952.*
10. *Parimelazhagaar (U.A.), Thirukkural, Moolamum Utsukum, Kazhagam Publication Chennai-18, Reprint-2008.*
11. *Venkatasamy Nattar N.M.(U.A.), Akananuru, Moolamum Utsukum, Kazhagam Publication Chennai-18, First Edition-1944.*

ARAN International e-Journal of Tamil Research

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com